# பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்பிற்கும் இடையிலான தொடர்பு: இலங்கையை மையப்படுத்திய ஓர் ஆய்வு

# The Relationship between Economic Growth and Direct Tourism Employment: A Study Based on Sri Lanka

M.U.F. Rifka[1] & M.M.S. Hajara[2]

[1&2] *Department of Economics and Statistics, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka*

[1] *rifka0966@gmail.com*

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகளாவிய ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக சுற்றுலாத் துறை காணப்படுகிறது. சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இடையிலான தொடர்பினை கண்டறிவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இதற்காக மாறிகளுக்கிடையிலான நீண்டகால தொடர்பை கண்டறிய ARDL சோதனையும் குறுங்கால தொடர்பை கண்டறிய வழுச்சரிப்படுத்தல் நுட்பமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தி, சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்புக்கள் என்பன மாறிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்காக 1977-2021 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு இடையிலான தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக E-views-10, Ms.Excel ஆகிய மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில் மாறிகளுக்கிடையில் இணைவுத் தொடர்பு காணப்படுவதாக ARDL Bound சோதனை மூலம் பெறப்பட்ட முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. அத்துடன் இந்த சோதனையின் படி, இலங்கையில் நீண்ட காலத்திலும் குறுங்காலத்திலும் பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலாத் துறை மொத்த நேரடி வேலைவாய்ப்புக்கும் இடையில் நேர்கணிய தொடர்பு உள்ளதாக முடிவு பெறப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறை மூலம் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக அரசாங்கமானது பல்வேறுபட்ட கொள்கைகளை அமுல்படுத்த வேண்டும் என இவ் ஆய்வானது பரிந்துரை செய்கின்றது.*

**திறவுச் சொற்கள்:** *பொருளாதார வளர்ச்சி, சுற்றுவாத் துறை, நேரடி வேலைவாய்ப்புக்கள்*

---

### *1. அறிமுகம்*

*சுற்றுலாத் துறையானது இன்று வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமன்றி வளர்முக நாடுகளிலும் காணப்படுகின்ற பொருளாதார வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஆற்றலை கொண்டிருக்கும் ஒரு துறையாகும். அந்நிய செலாவணியை சம்பாதிப்பதன் மூலமும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலமும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கி வருவதுடன் கடந்த பல தசாப்தங்களில் மிக வேகமாக வளர்ச்சி கண்டு வரும் பொருளாதார உற்பத்தி கூறாகவும் சுற்றுலாத் துறையானது இருந்து வருகின்றது.*

*சுற்றுலாத் துறையானது பல்வேறுபட்ட துறைகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புகளை கொண்ட துறையாகும். போக்குவரத்து, தொடர்பாடல், ஹோட்டல், வணிகம்,*

பொழுதுபோக்குத் துறை போன்ற பல்வேறுபட்ட துறைகளுடன் தொடர்பை கொண்டுள்ளது. இதனால் சுற்றுலாத் துறையானது பல்வேறுபட்ட நேரடி வேலைவாய்ப்புக்களையும் மறைமுக வேலைவாய்ப்புக்களையும் உருவாக்குகின்றது.

சுற்றுலாத் துறையானது ஒரு நாட்டினுடைய துரித பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்குகிறது. இதனை உலகில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட நாடுகள் அனுபவ ரீதியாக அடைந்தும் உணர்ந்தும் உள்ளன. மொத்த வேலைவாய்ப்பில் சுற்றுலாத்துறை வேலைவாய்ப்பின் பங்களிப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. அரசாங்கமானது சுற்றுலாத் துறையில் அதிக முதலீடு செய்யும் போது நாட்டில் அதிகமான வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. இதனால் வேலையற்றோரின் வீதம் குறைக்கப்படுகிறது. அத்துடன் சுற்றுலாத்துறையானது பல்வேறு வகையான சேவைகளின் தரத்தையும் நாட்டில் அதிகரிக்கின்றது.இதற்கு மேலாக, பலவகையான வணிக செயற்பாடுகள், சுற்றுலாத்துறையுடன் மறைமுகமாக தொடர்புறுகின்றன. பொதுவாக சுற்றுலாத் துறையினால் உருவாக்கப்படும் மறைமுக வேலைவாய்ப்புக்களானது நேரடி வேலைவாய்ப்புக்களை விட கூடுதலானதாகும்.

## *2. ஆய்வு நோக்கம்*

### *2.1 பிரதான நோக்கம்*

- இலங்கையில் பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலாத் து்யின் நேரடி வேலைவாய்ப்பிற்கும் இடையிலான தொடர்பினை கண்டறிதல்

### *2.2 துணை நோக்கம்*

- இலங்கையின் பொருளாதார வளர்ச்சிப் போக்கை கண்டறிதல்.
- இலங்கையின் சுற்றுலாத் துறையில் நிலவுகின்ற நேரடி வேலைவாய்ப்பின் போக்கினை கண்டறிதல்.
- பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலாத்துறையின் நேரடி வேலைவாய்ப்பிற்கும் இடையிலான குறுங்கால மற்றும் நீண்டகால தொடர்பை கண்டறிதல்

## *3. இலக்கிய மீளாய்வு*

Musthafa (2019) என்பவரின் ஆய்வானது இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மீது நேரடி வேலைவாய்ப்பானது ஏற்படுத்தும் தாக்கங்களினது போக்கை அடையாளம் காணுவதை நோக்காகக் கொண்டுள்ளது. இதற்காக 1978-2017ஆம் ஆண்டு வரையான காலத்தொடர் தரவுகள் கையாளப்பட்டுள்ளதுடன் சார்ந்த மாறியாக மொத்த சுற்றுலாப் பயணியரின் வருகையும் சாரா மாறிகளாக சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்பு, சுற்றுலாத் துறையினது மொத்த வருமானம் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக நு-ஏறைறள மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மாறிகளுக்கிடையிலான தொடர்புகளை கண்டறிவதற்காக பன்மடங்கு பிற்செலவு, Residual Test, correlation போன்ற முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுற்றுலாப் பயணிகளின் வருகை, சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்புக்கள், சுற்றுலாத் துறையின் வருமானம் ஆகிய மாறிகளுக்கிடையிலான தொடர்பானது வலுவானது என்றும் சுற்றுலாத் துறையினது வருமானம் மற்றும் நேரடி

வேலைவாய்ப்புக்கள் என்பன நேரடியாக சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் தொடர்புபடுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Embulendiya & Rajapakse (2015) என்பவர்களால் இலங்கைப் பொருளாதாரத்தில் சுற்றுலாத் துறையினது முக்கியத்துவத்தை அறியும் நோக்குடன் இரண்டாம் நிலை தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் சுற்றுலாத் துறையானது வேலைவாய்ப்பு உருவாக்கம், அந்நிய செலாவணியை அதிகரித்தலுக்கு பிரதான பங்களிப்பு செய்யும் சேவை துறையாக விளங்குகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும், சேவைத் துறையில் சுற்றுலாவுக்கான பங்களிப்பு மொத்த வருமானத்தில் 2 வீதமாகும் எனவும் பங்களிப்பு வீதமானது குறைவாக இருப்பினும் சுற்றுலாத்துறை மூலம் அதிக வருமானம் மற்றும் இலாபம் ஈட்டுவதற்கு பல்வேறு வழிமுறைகள் உள்ளன எனக் கூறப்பட்டுள்ளதுடன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை பல மடங்கு அதிகரிப்பதற்கு பல்வேறு வாய்ப்புக்களையும் வசதிகளையும் இலங்கை கொண்டுள்ளதுடன் அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏறபடுத்தலாம் என சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

Buultjen et al. (2015) என்பவர்களால் மோதலுக்கு பின்னரான சுற்றுலாத் துறை வளர்ச்சியின் தாக்கங்களை அறியும் நோக்குடன் ஆய்வு முன்வைக்கப்பட்டது. அதற்காக முதலாம் நிலைத் தரவுகளும் பண்பு ரீதியான தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவருடைய ஆய்வில் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் பல்வேறுபட்ட சுற்றுலா முயற்சிகள் பாரபட்சமானவையாக காணப்பட்டன எனவும் பெரியளவிலான முதலீட்டை ஈர்ப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ள ஒரு துறையாக மட்டுமன்றி தொழிற்துறை விரிவாக்கத்தை ஏற்படுத்தி உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டுமானங்களின் விருத்திக்கு பங்களிப்பு செய்கின்ற ஒரு சிறப்பியல்பு வாய்ந்த துறையாக சுற்றுலாத் துறை உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

***4. ஆய்வு முறையியல்***

இவ்வாய்வுக்காக 1977-2021 ஆம் ஆண்டு வரையான இரண்டாம் நிலைத்; தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது (GDP) தரவுகளும் இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபை ஆண்டறிக்கை மூலம் சுற்றுலாத் துறை தொடர்பான தரவுகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன.


இலங்கையினது சுற்றுலாத்துறையில் நிலவுகின்ற நேரடி வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்கு இடையிலான தொடர்பானது வரைபட ரீதியாக கண்டறியப்பட்டுள்ளதுடன் பொருளியலளவை நுட்பங்களினூடாக பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்விற்காக பயன்படுத்தப்படும் ஒவ்வொரு மாறியினதும் காலத் தொடர் உடமைகளை பரிசோதனை செய்ய அலகு மூலச் சோதனையில் Augmented Dicky Fuller மற்றும் Phillips Perron என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.

*மாறிகளுக்கிடையிலான கூட்டு ஒருங்கிணைவு தொடர்பு மற்றும் நீண்டகால தொடர்பு என்பவற்றை பரிசோதிப்பதற்காக ARDL Bound சோதனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் மாறிகளுக்கிடையிலான குறுங்காலத் தொடர்பை கண்டறிய வழுச்சரிப்படுத்தல் மாதிரியுரு பயன்படுத்தப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட காலத்தொடர் தரவுகளானது Eviews-10 புள்ளிவிபரவியல் மென் பொருள் தரவுப்பொதிகளின் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவசியமான சந்தர்ப்பங்களில் அட்டவணைகள், வரைபடங்கள் மற்றும் விளக்கப்படங்கள் மூலமாகவும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

### *5. பகுப்பாய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்*


#### *5.1.1 விபரண புள்ளிவிபரவியலின் பெறுபேறுகள்*

*ஆய்வில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மாறிகளான மொத்த உள்நாட்டு உற்பத்தி, சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்புக்கள் என்பவற்றின் போக்கினை கண்டறிய விபரண வரைபடமுறை பயன்படுத்தப்பட்டுள்ளது.*




*மொத்த உள்நாட்டு உற்பத்தியினது போக்கு ரூ. மில்லியன்*

Source: Central Bank Annual Report, (2021)




*இலங்கயின் சுற்றுலாத் துறையின் வேலைவாய்ப்புக்களின் போக்கு*


*Source: Various Annual Reports of Srilanka Tourism Development Authority*


ISBN: 978-624-5736-55-3

*மேலே காட்டப்பட்டுள்ள வரைபடங்களில் 1977-2020ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதமானது தளம்பல் நிலையில் காணப்படுவதுடன் சுற்றுலாத் துறையில் நிலவக்கூடிய நேரடி வேலைவாய்ப்புக்களின் அளவானது அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டு காணப்படுகின்றன.*

***5.1.2 சிதறல் வரைபடம்***

*சார்ந்த மாறியான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் சாரா மாறிகள் கொண்டுள்ள இணைவுத் தொடர்பை கண்டறிய சிதறல் வரைபட முறை பயன்படுத்தப்படுகின்றது.*




*நம்பிக்கை நீள்வளையமானது பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலாத் துறையில் நிலவக்கூடிய நேரடி வேலைவாய்ப்புக்களுக்கும் இடையே நேர்க்கணிய தொடர்பு காணப்படுவதைக் குறித்து நிற்கின்றது.*

***5.2 பொருளியலளவைப் பகுப்பாய்வின் பெறுபேறுகள்***

***5.2.1 அலகு மூலச் சோதனையின் பெறுபேறுகள்***

***அட்டவணை** 1. Augmented Dickey மற்றும் Phillips Perron அலகு மூலச் சோதனைகளின் பெறுபேறுகள்*

| **மாறிகள்** (Variables) | **P Value: ADF Test (Intercept Only)** | | | **P Value: Philip Perron Test (Intercept Only)** | |
|---|---|---|---|---|---|
| | **Level** | **1st Difference** | **2nd Difference** | **Level** | **1st Difference** |
| LNGDP | 0.3739 | 0.3419 | 0.0000* | 0.7297 | 0.0011* |
| LND EM | 0.9918 | 0.0013* | | 0.9918 | 0.0013* |

***மூலம்:** ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது, 2022.*

***குறிப்பு:** * 1% பொருளுண்மை மட்டங்களை குறித்து நிற்கின்றன.*

*இடைவெட்டினை மட்டும் உள்ளடக்கிய ADF மற்றும் Phillips Perron ஆகிய அலகு மூலச் சோதனைகளின் முடிவுகளை தொகுத்து நோக்கும் போது 1% பொருளுண்மை மட்டங்களில் அனைத்து மாறிகளும் முதலாம் வித்தியாசம் மற்றும் இரண்டாம் வித்தியாசத்தில் நிலைத்த தன்மையை கொண்டுள்ளதால்; இவ்வாய்வுக்காக Auto Regressive Distributed Lag (ARDL) மாதிரியுருவைப் பயன்படுத்த முடியும்.*

***5.2.2 ARDL Bound சோதனையின் பெறுபேறு***

*இவ்வாய்வுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள ARDL மாதிரியுருவிற்கான Bound சோதனை மூலம் பெறப்பட்ட பெறுபேற்றை அட்டவணை 2 காட்டுகின்றது.*


ISBN: 978-624-5736-55-3

*அட்டவணை 2. ARDL மாதிரியுருவிற்கான Bound சோதனை*

| Test Statistic | Value | K |
|---|---|---|
| F statisitic | 102.7579 | 1 |
| Critical Value Bounds | | |
| **Significance** | **Lower Bound [I(0)]** | **Upper Bound [I(1)]** |
| 10% | 3.02 | 3.51 |
| 5% | 3.62 | 4.16 |

*மூலம்: ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது, 2022.*

*இப்பெறுபேற்றின் படி 5% பொருளுண்மை மட்டத்தில் F புள்ளிவிபரமானது 102.7579ஆகவும் மேல் எல்லை மாறுநிலை பெறுமதியானது [I(1)] 4.16 ஆகவும் காணப்படுகின்றது. எனவே, இங்கு F புள்ளிவிபரமானது மேல் எல்லை பெறுமதியை விட பெரிதாகக் காணப்படுவதால் மாறிகளுக்கிடையில் கூட்டு ஒருங்கிணைவுத் தொடர்பு இல்லை எனும் சூனியக்கருதுகோள் நிராகரிக்கப்டுகின்றது. இதனடிப்படையில் இவ்வாய்வில் பயன்படுத்தப்படுகின்ற மாறிகளுக்கிடையில் கூட்டு ஒருங்கிணைவுத் தொடர்பு காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்படுகின்றது.*

***5.2.3 மாறிகளுக்கிடையிலான நீண்ட கால தொடர்புக்கான பெறுபேறு***

*இங்கு மாறிகளுக்கிடையில் கூட்டு ஒருங்கிணைவுத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால் ARDL(1, 0, 1, 0, 0) மாதிரியுருவை அடிப்படையாக கொண்டு பெறப்பட்ட மாறிகளுக்கிடையிலான நீண்டகால தொடர்புக்கான பெறுபேற்றை அட்டவணை 3 காட்டுகின்றது.*

*அட்டவணை 3 மாறிகளுக்கிடையிலான நீண்ட கால தொடர்புக்கான பெறுபேறு*

| சார்ந்த மாறி : LNGDP 18.99649* (0.0018) | |
|---|---|
| **சாரா மாறி** | **நீண்ட கால தொடர்பு குணகம்** |
| LNIND_EMP | 2.777224* (0.0000) |
| $R^2$ : 0.89 | |

மூலம்: ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது, 2022.

***குறிப்பு:*** **, 1% பொருளுண்மை மட்டத்தை குறிப்பிடுகின்றன.*

*ARDL கூட்டு ஒருங்கிணைவுச் சோதனையின் பெறுபேற்றின் அடிப்படையில் மாறிகளுக்கிடையிலான நீண்டகால தொடர்பானது பின்வரும் சமன்பாட்டின் மூலம் காட்டப்பட்டுள்ளது.*

$$LNGDP_{it} = 18.99649 + \ln 2.777224\ IND_EMP_{it} + U_{it}$$


ISBN: 978-624-5736-55-3

*இங்கு சுற்றுலாத் துறையினது நேரடி வேலைவாய்ப்புக்கள் நீண்டகாலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் பொருளுள்ள வகையில் நேர்கணியத் தொடர்பினைக் கொண்டுள்ளன. நீண்டகால பெறுபேறுகளை தொகுத்து நோக்குவோமாயின் 1% பொருளுண்மை மட்டத்தில் சுற்றுலாத் துறையினது நேரடி வேலைவாய்ப்புக்கள மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீது புள்ளிவிபர ரீதியாக பொருளுள்ள நேர்கணியத் தாக்கத்தைக் (0.1 < 0.0000) கொண்டுள்ளது. அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்புக்கள 1 வீதத்தினால் அதிகரித்தால் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியானது 2.777 வீதத்தினால் அதிகரிக்கும். எனவே சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்புக்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே நீண்டகாலத்தில் **நேர்கணிய தொடர்பு உள்ளது.***

### *5.2.4 வழுச்சரிப்படுத்தல் மாதரியுருவின் பெறுபேறுகள்*

*மாறிகளுக்கிடையிலான குறுங்கால தொடர்பை கண்டறிய பயன்படுத்தப்பட்ட வழுச்சரிப்படுத்தல் மாதிரியுருவின் பெறுபேறுகள் கீழே அட்டவணையில் காட்டப்படுகின்றன.*

அட்டவணை 4. வழுச்சரிப்படுத்தல் மாதிரியுருவின் பெறுபேறுகள்

| | |
|---|---|
| சார்ந்த மாறி : LNGDP | |
| சாரா மாறி : LND_EMP | 0.131888 (0.0000) |

மூலம்: ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டவை, 2022.

*குறுங்காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்கும் சுற்றுலாத் துறையில் நிலவக்கூடிய மொத்த நேரடி வேலைவாய்ப்பின் அளவுக்கும் இடையில் நேர்க்கணிய தொடர்புள்ளது. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் சுற்றுலாத் துறையின் நேரடி வேலைவாய்ப்புக்கள் 1 வீதத்தினால் அதிகரித்தால் நீண்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சியானது 0.131888 வீதத்தினால் அதிகரிக்கும்.*

### *6. விதந்துரைகள்*

*இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மீது சுற்றுலாத் துறையினது பங்களிப்பை அதிகரிப்பதற்காக அரசாங்கம் பல்வேறுபட்ட கொள்கைகளை அமுலாக்க வேண்டும் வேலைவாய்ப்புக்களை உருவாக்கி பொருளாதார ரீதியான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டினை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் வளர்ச்சியை எய்தலாம். சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான கொள்கைகளை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். இலங்கையில் சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்யும் நோக்குடன் பல்வேறு நாடுகளில் பின்பற்றப்படுகின்ற சிறப்பான சுற்றுலா மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் வேண்டும். சுற்றுலாத் துறையில் மனிதவள முகாமைத்துவத்தினை விருத்தியடையச் செய்தல்.*

## 7. References

Musthafa, A.M.M. (2019). A Study of Impacts of Tourism Direct Employment Trends on Tourism Arrivals: An Empirical Analysis of Sri Lankan Context. *Journal of Politics and Law*,*12*(3), 62-68.


ISBN: 978-624-5736-55-3

Munasinghe, L.M., Gunawardena, T., & Ariyawasana, R.G. (2018). Sri Lankan Travel & Tourism Industry: Recent Trends and Future Outlook Towards Real Estate Development. International Conference on Business Innovation,124-132. Retrieved from: https://www.researchgate.net/publication/327436587 (Accessed on : 2019.09.16)

Musthafa, A.M.M., & Sivarajasingham, S. (2015). The Role of Tourism Employment in GDP. Journal of Social Sciences and Humanities, 226-232. Retrieved from https://www.researchgate.net/publication/335992768 (Accessed on : 2019.09.16)

Central Bank of Srilanka. (2019). Annual Report. Colombo : Central Bank of Srilanka.

Suresh, J., & Senthilnathan, S. (2014). Relationship between Tourism and Economic Growth in Sri Lanka. Retrieved from : http://dx.doi.org/10.2139/ssrn.2373931 (Accessed on : 2019.09.25)

Stephen, J. (2013). Tourism Management. Roultedge 2 Park Square, Milton Park, Abingdon, Oxon.

Embuldeniya, A., & Rajapakshe, W. (2015). The Significance of Tourism in Sri Lanka. Retrieved from: https://www.researchgate.net/publication/326543634 (Accessed on : 2019.09.16)

Musthafa, A.M.M. (2019). A Study of Impacts of Tourism Direct Employment Trends on Tourism Arrivals: An Empirical Analysis of Sri Lankan Context. Journal of Politics and Law,12(3), 62-68.

Srilanka Tourism Development Authority. 2000-2020. Annual Statistical Reports. Colombo: Srilanka Tourism Development Authority, Srilanka.


ISBN: 978-624-5736-55-3